உ
கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கக.] பிரமாதீச ஷு ஆடிமீ [பகுதி-கூ.
Vol. XI. July—August. 1913. No. 9.

பரிசோதனத்தொடர்.

(திருக்குறள்—கஉகக.)

"நனவினானல்காரைநோவர்கனவினாற்
காதலர்க்காணாதவர்"

இதற்கு, "தானாற்றுதற்பொருட்டுத் தலைமகனை யியற்பழித் தாட்கு இயற்படமொழிந்தது" என முன்னுரையும்,

"தமக்கொருகாதலரின்மையின் அவரைக் கனவிற்கண்டறியாத மகளிர் தாமறிய நனவின்கண்வந்துநல்காத நங்காதலரை அன்பில ரென நோவாநிற்பர்" எனத் தொகுத்துரையும்,

"இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலின் நன்மைதோன் றக்கூறினாள். தமக்குங் காதலருளராய் அவரைக் கனவிற்கண்டறி வாராயின், நங்காதலர் கனவின்கணாற்றி நல்குதலறிந்து நோவா ரென்பதாம்" என விசேடவுரையும்,

பரிமேழகருரையாக அச்சிட்டபுத்தகங்களிலும் பழைய பலஏடுகளிலு மெழுதப்பட்டிருக்கின்றன.

இங்குக் காட்டிய விசேடவுரையுள் "இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலின் நன்மைதோன்றக் கூறினாள்" என்றபாகம் மட்டுமே இங்கு ஆராயத்தக்கதாயுள்ளது.

இதில் நன்மையாவது யாது? அது இங்குத்தோன்றுமாறெங்ஙனம்? தோன்றுமாயினும் அது புலந்துகூறுங்கூற்றோடு பொருந்துமாறென்னை? எனப் பல சங்கைநிகழ்தற்கிடனாய்ப் பொருள்விளங்காதிருக்கின்றது.

இவ்வாறிருப்பதுபற்றியே ஒரு பதிப்பில் "துஞ்சுங்காற்றோண்மேலராவர்" "விழிக்குங்கால் நெஞ்சத்தராவர்" 'கனவின்கண் நல்குவர்' 'என்று தலைமகனது நன்மைதோன்றக் கூறினாள்' என மேற்குறளிற் கூறிய கூற்றுக்களே நன்மைதோன்றக்கூறும் கூற்றுக்களாகக்கருதிக் கீழ்க்குறிப்பெழுதப்பட்டிருக்கிறது:

"இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலின் நன்மைதோன்றக் கூறினாள்" என்னும் உரைவாக்கியத்தை யுற்றுநோக்குமிடத்து "புலக்கின்றாளாகலின்" என்பது ஏதுவாதலால், நன்மைதோன்றக் கூறவேண்டாத தலைவி புலத்தல்காரணமாக நன்மைதோன்றக்கூறினள், என்னும் பொருள்தோன்றக் கிடக்கின்றது.

இங்கு, தலைவி தலைவன்பிரிவாற்றாது வருந்துதல்பற்றித் தலைவனது நன்மைதோன்றக் கூறவேண்டாதுநின்றே அதுதோன்றக் கூறியதாகவைத்துக்கொள்ளினும், அக்கூற்று இயற்பழித்தலை யாற்றாந்துணையே யமையுமென்பதல்லது புலத்தனிமித்தமாகுமென்பது பொருத்தமுடைத்தன்று.

"துஞ்சுங்காற் றோண்மேலராவர்" "விழிக்குங்கால் நெஞ்சத்தராவர்" "கனவின்கண்நல்குவர்" என மேற்குறள்களிற் கூறிய வாக்கியங்களும் இயற்பழித்ததோழியைநோக்கித் தலைவி யியற்படமொழிதலாயுள்ளன. இவையும் தலைவி தோழியைப் புலக்குங்கருத்தினளாகித் தலைவனதுநன்மைதோன்றக் கூறிய கூற்றாயின் அக்கூற்றுள்ள மேலைக்குறளுரையினகமாகவே, "இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலின் நன்மைதோன்றக்கூறினாள்" என்னும் இவ்விசேடவுரைவாக்கிய மெழுதப்பட்டிருக்கவேண்டும். அக்குறளுரைகளுக்குள் இஃதெழுதப்படாமையால் அஃது உரையாசிரியர் கருத்தன்றென்று தோன்றுகின்றது.

அன்றியும், பரிமேலழகர் விசேடவுரையு ளெடுத்துரைப்பவை யெல்லாம் இலக்கணங்கூறி வழுக்களைவதும் விளங்காதவற்றை விளக்குவதுமேயாம்.

இக்குறளின் றலைவிகூற்று, தலைவனது நன்மைதோன்றக் கூறுதலாயின் அது வழுவன்மையால் இலக்கணங்கூறி வழுக்களையத்தக்கதன்று ; எஞ்சிய விளக்குரையெனினும் பொருந்தாது ; ஏனெனில் ? "தானாற்றுதற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது" என முன்னமே எழுதப்பட்டமுன்னுரையின் றொடர்பு தோன்ற "இதுவுமது" எனத் துறைவிளக்க மெழுதியிருத்தலால் இக்குறட்கூற்றும் இயற்படமொழிதலென விளங்குகின்றது. விளங்கவே, அவ்வியற்படமொழிதலின்வேறாகாத விதனை மறித்தும் நன்மை தோன்றக் கூறினளௌனவிளக்குவது கூறியதுகூறலாம்.

அன்றியும், புலக்கின்றாளாகலின் எனப் புலத்தலை நிமித்தமாகக் கூறினமையால், புலத்தற்குறிப்புத்தோன்றுமாறு அங்ஙனங் கூறினாள் என்பதே உரைகாரர்கருத்தாகக் கொள்ளல்வேண்டும். அங்ஙனங் கொள்ளுங்கால் நன்மைதோன்றக் கூறுவதுபற்றிப் புலத்தற்குறிப்புப் புலப்படுதலின்மையால் நன்மைதோன்றக் கூறினாள் என்பது பொருந்தவில்லையென்றும், புலத்தற்குறிப் புணர்த்தற்குரிய பிறிதொருசொற் பெற்றிருக்கவேண்டுமென்றும் கருதக்கிடக்கின்றது.

இவ்வாறிருப்பதுபற்றி மதுரைத்தமிழ்ச்சங்கத்திலுள்ள திருக்குறட் பரிமேலழகருரையான பழைய ஏட்டுப்பிரதிகளைப் பார்த்ததில் அவற்றில் மூன்றுபிரதிகளில் "இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலிற் பன்மைதோன்றக்கூறினாள்" என எழுதப்பட்டிருக்கிறது.

இப் பாடத்தில் தலைவி தோழியைநோக்கிக் கூறுமிடத்து இயல்பாகிய ஒருமையாற் கூறக்கடவதாயிருக்க அங்ஙனங்கூறாது "நோவர்" "காணாதவர்" எனப் பன்மையாற்கூறியது இலக்கணமருங்கிற் சொல்லாறல்லாத ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியானமையால் அதற்கிலக்கண முரைக்கக்கருதி "இயற்பழித்தது பொறாது புலக்கின்றாளாகலிற் பன்மைதோன்றக் கூறினாள்" என இலக்கணமுரைத்ததாகக் கொள்ளற் கிடனுண்டாயிருக்கிறது.

"ஒருவரைக்கூறும்பன்மைக்கிளவியு
மொன்றனைக்கூறும்பன்மைக்கிளவியும்
வழக்கினுகியவுயர்சொற்கிளவி
யிலக்கணமருங்கிற்சொல்லாறல்ல"—தொல் - சொல். சூ - உஎ.

என்னுந் தொல்காப்பியச்சூத்திரவுரையுள், "தாம்வந்தார் தொண்டனுர் என......உயர்சொற்ருனே குறிப்புநிலையாய் இழிபு விளக்கிற்று" எனச் சேனுவரையர் கூறியவாற்ருல் ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவி குறிப்புநிலையா யிழிபுணர்த்திநிற்குமென்பதும் பெறப்படும். இதனை நன்னூலார் "உவப்பினுமுயர்வினும்...........இழிப்பினும் பாறிணையிழுக்கினு மியல்பே" என வழுவமைப்பர்.

ஆதலால் இயற்பழித்ததுபொருது புலக்கின்றதலைவி தோழியி னறியாமைபற்றி யிழிக்குங்குறிப்பொடு கூறுகின்ருளாதலிற் பன் மைதோன்றக் கூறினுள் எனக்கொள்வது பொருத்தமுடைத்தாயிருக் கிறது.

இவ்வாறு தோழியைநோக்கிப் பன்மையாற்கூறியதற் கிலக்கண முரைத்தனராயின் முன்னிலையான அவனை அயலோரைப்பேசுவது போல் "நோவர்" "காணுதவர்" எனப் படர்க்கையாகக் கூறிய தற்கு மிலக்கணங் கூறவேண்டுமேயெனின் வேண்டும்; இவ்விலக் கணம் 'பின்னதுநிறுத்தல்' என்னு முத்தியால் அடுத்தகுறளுரையிற் கூறியுள்ளார். அது வருமாறு:—

"நனவினனக்நீத்தாரேன்பர்கனவினுற்
காணுர்கொலிவ்வூரவர்" (வள்ளுவர் - கஉஉ0.)

என்பதன் விசேடவுரையுள் "என்னெடு தன்னிடை வேற்றுமையின் ருயின் யான்கண்டது தானுங் கண்டமையும்: அதுகாணுது அவரைக் கொடுமை கூறுகின்றமையின் அயலாளேயாமென்னுங்கருத்தால் இவ்வூரவர் என்ருள்" என இடவழுவமைத்திருக்குமாறு கண்டு கொள்க. இங்கு இவ்வூரவர் எனப் பன்மையாற்கூறிய பால்வழு வமைதியை 'முன்மொழிந்துகோடல்' என்னு முத்தியால், "இயற் பழித்ததுபொருதுபுலக்கின்ருளாகலிற் டன்மைதோன்றக்கூறினுள்" என முற்குறளுரையிற் கூறப்பட்டமையால் ஈண்டுக்கூறுதுவிடுத்தார்.

இவ்வாறோரதிகாரத்துள் ஒருங்குணர்த்தவேண்டு மிரண்டிலக்கணங்கள் பின்னும்வருமாயின் அவற்றுள் ஒன்றினை யோரிடத்தும் பிறிதொன்றினை மற்றோரிடத்துமாக நஷ்டாசுவதக்தரதநியாயம்பற்றிச் சுருங்கக்கூறி யுய்த்துணரவைத்துச்செல்வ திவ்வுரைகாரரதியல்பேயாம். இதனைப் 'பசப்புறுபருவரல்' என்னுமதிகாரத்துள்,

"பசந்தாளிவளென்பதல்லாலிவளைத்
துறந்தாரவரென்பாரில்" (வள்ளுவர்-கக௮௮.)

என்னுங் குறளுரையில் "என்பார் என வேறுபடுத்துக்கூறினாள் தன்னையே நெருக்குதல்பற்றிப் புலக்கின்றமையின்" எனப் படர்க்கையான இடவழுவொன்றே யமைத்துப் பால்வழுவமையாதுவிடுத்துப் பின்,

"பசப்பெனப்பேர்பெறுதனன்றேநயப்பித்தார்
நல்காமைதூற்றாரெனின்" (வள்ளுவர்-ககக௦.)

என்னுங் குறளுரையில் "இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலின் இகழ்ச்சிக்குறிப்பாற் கூறினாள்" எனத் தூற்றார் என்னும் பன்மை இகழ்ச்சிக்குறிப்புப்பற்றிவந்ததெனப் பால்வழுவொன்றுமமைத்து இடவழுவமையாதுவிடுத்தமையால் இவ்விரண்டனையும் நஷ்டாசுவதக்தரதநியாயம்பற்றி யொருங்குணர்த்தியதாக வுய்த்துணரவைத்தனரெனக் கொள்ளல்வேண்டும்.

நஷ்டாசுவதக்தரதநியாயமாவது:—பரியிழந்ததேருடையோனும், தேரிழந்தபரியுடையோனும் இவ்விருவருங்கூடி நேயமுடையராய் அவருட் பரியிழந்ததேருடையோனுக்கு வேண்டுழித் தேரிழந்தோன் பரியுதவவும், தேரிழந்த பரியுடையோனுக்கு வேண்டுழிப் பரியிழந்தோன் றேருதவவும் அவ்விருவரு மிரண்டுங்கொண்டு தனித்தனியூர்ந்துதிரியு முலகவழக்குப்போல்வதொரு பனுவல்வழக்கு.

இவ்வழக்குப்பற்றியே இடவழுவமைப்பொழிந்த பால்வழுவமைப்பினையும், பால்வழுவமைப்பொழிந்த இடவழுவமைப்பினையும் ஒருங்குகூட்டி, புலக்குங்கருத்தினளாய், இழித்தற்குறிப்பாற் பன்மைதோன்றக் கூறினளென்றும், அயலாளேயாமென்னுங் கருத்தாற் படர்க்கையாய்க் கூறினளென்றும் அவ்விரண்டு குறளினுமே

இடவழுவும் பால்வழுவும் இரண்டும் அமைத்தனரெனக்கொள்ளற் கிடமுண்டாயிருக்கிறது.

ஆதலால் "இயற்பழித்ததுபொருது புலக்கின்றாளாகலிற் பன்மை தோன்றக்கூறினுள்" என்றபாடம் பொருத்தமுடைத்தாகக் காணப் படுகிறது.

புலக்கின்றாளாகலிற் பன்மைதோன்றக்கூறினுள் என்னும் இப் பாடமே, புலக்கின்றாளாகலின் பன்மைதேன்றக் கூறினுள் எனப் பிரித்தெழுதப்படவும் கூடும்; அங்ஙனம் எழுதிவருமுறையிற் பகரம் வீழ்ந்த பிரதியிற் புலக்கின்றாளாகலி ன னமைதோன்றக்கூறினுள் எனத்தோற்றுவதுகண்டு, புலக்கின்றாளாகலி னன்மைதோன்றக் கூறினுள் எனப்படித்துப் பொருள்விளங்குமாறு "புலக்கின்றாளாக லின் நன்மைதோன்றக்கூறினுள்" எனப் பிரித்தெழுதப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

௳

திருவள்ளுவர் தொடைநடை விளக்கம்.

பாவடிகளிலுள்ள எழுத்துச் சொற் பொருள்களை எதிரெதிர் நிறீஇத்தொடுப்பதைத் தொடையென்றனர், ஆசிரியர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியவர். அத்தொடை பலவகைப்படினும், இன்றியமையாச் சிறப்பினவாக் கொண்டவை 'மோனை' 'எதுகை' 'முரண்' 'இயைபு' என நான்கே. என்னை?

"மோனை யெதுகை முரணே யியைபென
நானெறி மரபின தொடைவகை யென்ப" (தொல். செய். 88)

என்றாராகலின்.

அத்தொடைநான்கும் விகற்பங்களுடன் இக்காலத்திற்கு ஏற்பன கொண்டு, ஆசிரியர் திருவள்ளுவனார் குறட்பாவில் அமைத்து விளக்கியவாறு, இதனடியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவை திருக்குறள் கற்போர்க்குப் பெரிதும் பயன்படுமென்க.

1. மோனைத்தொடை.

1. அடிமோனை.

பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

2. இணைமோனை.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

3. பொழிப்புமோனை.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. ஒரூஉமோனை.

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

5. கூழைமோனை.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

6. மேற்கதுவாய்மோனை.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

7. கீழ்க்கதுவாய்மோனை.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

8. முற்றுமோனை.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

9. கடைமோனை.

[பின்னடியின்சீர் குறையப்பெற்றமையின் காட்டில்லை.]

10. கடையிணைமோனை.

காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

11. பின்மோனை.

நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது.

12. கடைக்கூழைமோனை.

எவ்வது உறைவது உலகம் உலகத்தொடு
அவ்வது உறைவது அறிவு.

13. இடைப்புணர்மோனை.

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

14. வருக்கமோனை.

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு.

15. நெடில்மோனை.

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

16. வல்லினமோனை.

பழமை எனப்படுவது யாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

17. மெல்லினமோனை.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழினலம்
மண்மாண் புனைபாவை அற்று.

18. இடையினமோனை.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

19. தலையாகுமோனை.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

20. இடையாகுமோனை.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

21. கடையாகுமோனை.

நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

---

2. எதுகைத்தொடை.

1. அடியெதுகை.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

2. இணையெதுகை.

கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.

3. பொழிப்பெதுகை.

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

4. ஒரூஉவெதுகை.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

5. கூழையெதுகை.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

6. மேற்கதுவாயெதுகை.

வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதனோய் எல்லாங் கெட.

7. கீழ்க்கதுவாயெதுகை.

பெண்ணினுற் பெண்மை உடைத்தென்ப கண்ணினுற்
காமநோய் சொல்லி யிரவு.

8. முற்றெதுகை.

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

9. கடையெதுகை.

[பின்னடியின்சீர் குறையப்பெற்றமையின் காட்டில்லை.]

10. கடையிணையெதுகை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

11. பின்னெதுகை.

எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

12. கடைக்கூழையெதுகை.

இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.

13. இடைப்புணரெதுகை.

இறைகடியன் என்றுரைக்கும் இன்னுச்சொல் வேந்தன்
உறைகடுகி யொல்லைக் கெடும்.

14. வருக்கவெதுகை.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானெடு ஊர்ந்தா னிடை.

15. நெடிலெதுகை.

கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

16. வல்லினவெதுகை.

உப்பமைந் தற்றுற் புலவி யதுசிறிது
மிக்கற்றுல் நீள விடல்.

17. மெல்லினவெதுகை.

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று.

18. இடையினவெதுகை.

உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

19. தலையாகெதுகை.

அறவாழி அந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

20. இடையாகெதுகை.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

21. கடையாகெதுகை.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

22. ஆசிடையெதுகை.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

23. உயிரெதுகை.

நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.

24. மூன்றாமெழுத்தொன்றெதுகை.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

---

3. முரண்தொடை.

1. அடிமுரண்.

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன்.

2. இணைமுரண்.

ஒருநாள் எழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.

3. பொழிப்புமுரண்.

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

4. ஒரூஉமுரண்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

5. கூழைமுரண்.

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

6. மேற்கதுவாய்முரண்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

7. கீழ்க்கதுவாய்முரண்.

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.

8. முற்றுமுரண்.

நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.

9. கடைமுரண்.

[பின்னடியின்சீர் குறையப்பெற்றமையின் காட்டில்லை.]

10. கடையிணைமுரண்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

11. பின்முரண்.

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

12. கடைக்கூழைமுரண்.

கண்ணில் துனித்தே கலங்கினுள் புல்லுதல்
என்னினுந் தான்விதுப் புற்று.

13. இடைப்புணர்முரண்.

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

---

4. இயைபு.

I. அடியியைபு.

[பின்னடியின்சீர் குறையப்பெற்றமையின் காட் டில்லை.]

2. இணையியைபு.

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

3. பொழிப்பியைபு.

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

4. ஒரூஉவியைபு.

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

5. கூழையியைபு.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

6. மேற்கதுவாயியைபு.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

7. கீழ்க்கதுவாயியைபு.

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

8. முற்றியைபு.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி யிடத்தாற் செயின்.

9. கடையியைபு.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

10. கடையிணையியைபு.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

11. பின்னியைபு.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

12. கடைக்கூழையியைபு.

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்.

13. இடைப்புணரியைபு.

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

தச்சநல்லூர், }
30—7—13. }

நச்சினார்க்கினியன்.

பொருளதிகார ஆராய்ச்சி.

(உருச-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

முன்காட்டிய விவரங்களை யுற்றுநோக்குவார்க்கு அவ்வவ் நிலங்களுக்குத்தகுந்த கருப்பொருளை விரித்துக்கூறியிருப்பது பண்டைத் தமிழ்ப்புலவர்கள், தமக்குப் புறம்பாயுள்ளவற்றையெல்லாம் செவ்வனேநோக்கி, அவற்றை ஒவ்வோரியையுபற்றிப் பற்பலபிரிவுகளாகப் பிரித்து முறைப்படுத்துவதில் ஆற்றவும் ஆற்றல்வாய்ந்தவர் என்பதற்குப் போதியசான்றாகும்.

இவற்றுட் கருப்பொருள்விளக்கமொன்றே, ஒருவாறு தாவரநூல் (Botany) விலங்கியல்நூல் (Zoology) பௌதிகநூல் (Geography) ஜனசமூக அமைப்புநூல் (Sociology) முதலிய இக்காலத்து மேனாட்டாராற் போற்றப்பெற்றுவரும் சாஸ்திரங்களில் ஸ்தூலமாகக்காணப்படும்பொருள்களை நம் தமிழ்ப்புலவர்கள் அறியாதவர் அல்லர் என்பதனை நிலைநாட்டும்.

இனி இவ்வகத்திணைகட்கும், அவற்றுக்குரிய எனக் கூறப்பட்ட பெரும்பொழுது சிறுபொழுதுகட்கும் உள்ள இயைபினைச் சிறிது நோக்குவாம்.

குறிஞ்சிக்குக் கூதிரும், யாமமும் கூறியது எற்றிற்கோ எனின், குறிஞ்சி, புணர்ச்சிக்குத்திணை. களவில் தலைவியோடு புணர்ச்சி நிகழ்த்தும் தலைமகனுக்கு, அத்தலைவி எவ்வளவுக்கெவ்வளவு அரியளாகின்றாளோ அவ்வளவுக்கவ்வளவு புணர்ச்சியின்பஞ் சிறக்குமாதலானும், தலைவியினது அருமையினை இருள், மழை யிவற்றாற் களவின்கண்ணே தலைமகற்குப் புலப்படுத்துவது, ஐப்பசியும் கார்த்திகையுமாகிய கூதிர்காலமும் அதன் இடையாமமுமே ஆகலானும் கூதிரும் யாமமும் குறிஞ்சிக்குப் பொழுதாயின. முன்பனிக்காலமாகிய மார்கழியும் அத்துணைச்சிறப்பில்லாதது எனினும், பொருத்தமுடைமை பற்றி முன்பனியும் பின்னர்ச்சேர்க்கப்பட்டது. இங்ஙனமே மற்றைப் பொழுதுபாகுபாடுகள் அவ்வத்திணைகளுக்கு மிகவும் ஏற்புடைத்தாமாறு கற்றோரால் உற்றுநோக்கி உணரற்பாலது.

இத்துணை இயைபுபெறத் திணைகட்கு முதல், கரு, உரிப் பொருள்கள் கூறிவைத்தாரெனினும், இந்த வரையறைக்குட்பட்டே இலக்கியம் இயங்கவேண்டுமென்பது ஆசிரியர்கருத்தன்று. அவர் பிறஇடங்களிற்போலவே இங்கும், காப்பியப்புலவனது முயற்சி எளிதிற் கைகூடும்படி இலக்கணமுறுக்கினை இளக்கிக்கொடுத்திருக் கிறார். எங்ஙனமோ எனின், திணைகள் தம்முள்ளும் தமது உரிப் பொருளல்லாத மற்றைப்பொருட்களுள்ளும் மயங்கிவருதல் அமை வுடைத்து என்பதனை,

"திணைமயக்குறுதலுங்கடிநிலையிலவே"
"உரிப்பொருளல்லனமயங்கவும்பெறுமே"

"எந்நிலமருங்கிற்பூவும்புள்ளும்
அந்நிலம்பொழுதொடுவாராவாயினும்
வந்தநிலத்தின்பயத்தவாகும்"

என்னும் புறனடைச்சூத்திரங்களிற் சொல்லிப்போந்தனர்.

இவ்வாறு திணைகள் தம்முள் மயங்குதற்குச்செய்யுள், தமி ழிலக்கியத்திற் பல எளிதிற்காணப்படும். சூத்திரவுரையின்கண்ணே நச்சினார்க்கினியரும் எத்துணையோ மேற்கோள்கள் சங்கமரீஇய நூல்களிலிருந்து எடுத்துக்காட்டியுள்ளார். யாமும் அவராற் கூறப் பெறாதனவாகிய இரண்டொருசெய்யுட்களை இங்கு எடுத்துக்காட்டு வது பொருத்தமுடைத்தெனக்கருதி அவற்றைக் கீழேதருகின் றோம். சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தின்,

"முலைத்தடஞ்சேதகம்பொதிப்பமற்றவர்
குலைத்துடன்பதித்தலிற்குதித்தவாட்கயல்
புலத்திடைக்கவரிகன்றூட்டப்போந்தபால்
நிலத்திடைப்பாய்ந்தவைபிறழுநீரவே"

என்பதில் மருதமும், முல்லையும் மயங்கியுள்ளமையும்,

"பாற்சுவையறிந்தவைபழனத்தாமரை
மேற்செலப்பாய்தலின்வெரீஇயவண்டினம்
கோற்றெருடிநுளைச்சியர்முத்தங்கோப்பவர்
ஏற்றியமாலைத்தேனிரியப்பாய்ந்தவே."

என்பதில் முல்லையும், மருதமும், நெய்தலும் மயங்கியமையும், பத்துப் பாட்டில், குறிஞ்சிப்பாட்டின்கண்ணே,

"சினை இயவேந்தன்செல்சமங்கடுப்பத்
துனை இயமாலைதுன்னுதல்காணூஉ"

எனக் குறிஞ்சிக்குப்பொழுதல்லாத மாலைப்பொழுது மயங்கிவந்ததும், மேற்கூறிய தொல்காப்பியச்சூத்திரங்களுக் குதாரணமாகும்.

அகத்திணைப்பாகுபாட்டினையும், அவற்றின் பொருள்களையும், அவற்றோடியைபுபெற்ற மற்றும் பிறவற்றையும் சிறிதுவிரிவாக இதுகாறுங் கூறினேம்; அது எதற்கோ எனின், சங்கச்செய்யுட்களில் யாண்டும், இத்திணையும் பிறவும் பெரிதும் பயில்வன ஆகலானும், ஐங்குறுநூறு, கலித்தொகை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை முதலாய இந்நூல்களெல்லாம் ஐந்திணைமுதலியவற்றில் ஐயந்திரிபறப் பழகியிருந்தாலன்றிப் படிப்பார்க்குப் பொருள் நயம் தோன்றுவாகலானும் என்க.

இனி அகத்தின் இருபிரிவாகிய களவொழுக்கம், கற்பொழுக்கம் என்பவற்றுள், களவொழுக்கத்தினது இலக்கணமும், அவ்விலக்கணத்தால் அறியப்படுவனவும் கூறப்படும்.

களவொழுக்கம்.

——:o:——

களவொழுக்கம் என்பது பிறப்பு, கல்வி, அன்பு முதலியவற்றால் ஒத்த தலைவன் தலைவியர், தம்முயற்சியாலன்றி, தெய்வசங்கற்பத்தால் எதிர்ப்பட்டு ஒருவர்மாட்டொருவர்க்குத் தம்மையறியாதெழுந்த வேட்கைமிகுதியால், தம்முட் கூடிக்கலப்பது. இதனை யாழோர் கூட்டம் என்றுங் கூறுவர். வடநூலார் இவ்வொழுக்கத்தினைக் காந்தர்வமென்பர். "கந்தர்வவழக்கம் என்பது, கந்தருவரென்பார் ஈண்டுச்செய்த நல்வினைப்பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி, இருவரும் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது. அதுபோன்ற கூட்டத்தினைத் தமிழர் களவொழுக்கம் என்பர்" என்று இறையனாரகப்பொருளுரையின்கண்ணே நக்கீரனார் கூறியுள்ளார்.

காட்டில் வேட்டையாடச்சென்ற துஷ்யந்தமஹாராஜன், வழி தவறிக் கண்வமுனிவரது ஆச்ரமத்தினருகேவர, அங்கு அப்போது அவனைச் சகுந்தலை எதிர்ப்பட, அவ்விருவரும் தம்முண் மனமொத்துக்கூடினர் என்பதும், அம்மணத்தினைக் கண்வமுனிவர் கடியாது, நேரிதெனக்கொண்டார் என்பதும் சாகுந்தலநாடகத்திற் காணப்படுகின்றன.

இக்காலத்து நம்நாட்டில், இவ்வொழுக்கம் பற்பல இடையூறுகளால் நிகழாதொழிந்தது எனினும், நவீனநாகரிகம்வாய்க்கப்பெற்றுள்ள மேனாட்டார் இவ்வொழுக்கத்தை இப்போதும் அநுசரித்து வருகிறார்கள். பண்டைக்காலத்தில் "பொய்யும் வழுவும்" இப்போதைப் போல, அத்துணை அதிகமாக இல்லாமையால், களவொழுக்கம் அக்காலத்து நிகழ்ந்துவந்தது. அதன்கண் இயல்பாகவே யமைந்துள்ள சிறப்புப்பற்றி, வடமொழியிற் சாஸ்திரநூல்களிலும், தமிழில் இலக்கணநூல்களிலும் இம்மணத்தின் இயலெல்லாம் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. துஷ்யந்தனும் சகுந்தலையும் மணந்தது முன்னரே கூறினோம்.

சூர்ப்பணகை இராமபிரான்மீது காதல்கொண்டு அவரைத் தன்னை மணக்கும்படிவேண்டிக்கொள்ளுஞ் சமயத்தில் இம்பர்நாடெலாம் பம்புபுகழ்படைத்த கம்பநாடரும்,

"காந்தர்ப்பமென்பதுண்டாற்காதலிற்கலந்தசிந்தை
மாந்தர்க்குமடந்தைமார்க்குமறைகளேவகுத்தகூட்டம்"

எனக் கூறியிருக்கிறார்.

அருச்சுனன் தீர்த்தயாத்திரைக்குச் சென்றபோது பாண்டியன் மகளாகிய சித்திராங்கதையை "ஒரு சண்பகத்தின் பூந்தண்ணீழலில்" எதிர்ப்பட்டு,

"செந்திருவையனையாளுந்திருமாலையனையானுஞ்சிந்தையொன்றாய்
வந்திருவர்விலோசனமுந்தடையின்றியுறவாடிமகிழ்ச்சிகூர்ந்து
வெந்தருவமிழந்தமதன்மீளவும்வந்திரதியுடன்மேவுமாபோற்
கந்தருவமுறைமையினாற்கடவுளர்க்குங்கிடையாதகாமந்துய்த்தார்"

என வில்லிபுத்தூரரும் கூறியிருக்கிறார்.

பிறப்பு, கல்வி, அன்பு இவற்ருல் ஒத்த தலைவன் தலைவியர் தாம் ஒருவரை யொருவர் கண்டபோதே காதல்கொண்டு சேர்ந்து துய்க்கும்(காந்தருவமணத்தின்) இன்பத்துக்குநேராக மற்றை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் எழுவகைமணத்தின்கண்ணும் நிகழும் இன்பத்தினைக் கூறுதல் ஒவ்வாது. ஏனெனில், பிரமம் என்பது நாற்பத்தெட்டு வருஷம் பிரமசரியங்காத்தானுக்குப்பன்னீராட்டைப்பிராயத்தாளை அணிகலனணிந்து கொடுப்பது; பிரசாபத்தியம் என்பது மைத்துனகோத்திரத்தான் மகள்வேண்டின் மறாது அவனுக்கு மகட்கொடுப்பது; ஆரிடம் என்பது காளையையும், பசுவையும் அலங்கரித்து அவற்றிடையே மகளை நீரிற்கொடுப்பது; தெய்வம் என்பது வேள்வியாசிரியனுக்கு வேள்வித்தீமுன்னர் மகளைக்கொடுப்பது; அசுரம் என்பது முற்குறித்துள்ள சங்கேதப்படி கொல்லேறுதழுவியோ, வில்லேற்றியோ மகட்பெறுவது; இராக்கதம் என்பது பெண்ணினைப் பெற்றோரிடத்தும் அவளிடத்தும் அனுமதிபெறாது வலிந்துகொள்வது; பைசாசம் என்பது தனக்குமேற்பட்ட வயதினையுடையவள், தூங்குகின்றவள் இவர்களுடன் சேர்வது; எனவே இவ்வேழு மணங்களில் ஒன்றிலேனும், தலைவன் தலைவியர் இருவர் மனமும், மன்றல்நிகழ்வதற்குமுன் ஒத்திருந்தது என ஒருதலையாகக் கொள்வதற்கு ஆதாரம் இல்லையாதலின். மணமக்கள்தம்முடைய மனநிலையுணர்ந்தே மணவினைநிகழ்த்துதல் மற்றையவாகிய மணத்தைக்காட்டிலும் மாண்புடையதன்றோ?

கந்தர்வமணத்தின்சிறப்பு இம்மட்டோ. தமிழ்ப்புலவர்கள், தாம் கடவுளர்மீது தோத்திரமாகப்பாடும் பிரபந்தங்களில் தமது "உள்ளங்கவர்ந்தெழுந்தோங்கும்" பக்தியினைத் தலைவன் தலைவியாது உள்ளத்தில்நிகழும் அன்புவாயிலாக வெளியிட்டிருக்கிறார்கள். கடவுளைத் தலைவராகவும், தம்மைத் தலைவியாகவும், பாவித்து அவர்கள் பாடியுள்ளநூல்கள் பல. அவற்றுள், மாணிக்கவாசகப்பெருமான் இயற்றிய திருச்சிற்றம்பலக்கோவையாரும், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தமும், முறையே சைவர்களாலும் வைணவர்களாலும் மிகச் சிறந்தனவென்று பாராட்டப்படுகின்றன.

எனவே, களவொழுக்கத்தின்கண்ணே நாயகன் நாயகி இவர்கள் உள்ளத்தேநிகழும் உழுவலன்பின் உயர்ச்சி கூறியதாயிற்று.

இதுகாறும் களவொழுக்கத்தின் சிறப்புக் கூறப்பட்டது. இனி அதன் இலக்கணங்களைச் சிறிது எடுத்தியம்புவாம்.

முதற்கண் இக் களவொழுக்கத்திற்குத் தலைவனுந் தலைவியும் இன்றியமையாது வேண்டும்; பாங்கன், பாங்கி, செவிலி, நற்றாய் முதலியவர்களைப்பற்றி ஆங்காங்கு வேண்டப்படுமிடத்துக் கூறுவோம்.

தலைவன் பெருந்தன்மைக்குணமும், மனத்திட்பமும் வாய்க்கப் பெற்றவனாதல் வேண்டும். "பெருமையுமுரனும் ஆடூஉமேன" என்பர் தொல்காப்பியர். பெருமைக்குணம் என்பது "அறிவும், ஆற்றலும், புகழும், கொடையும், ஆராய்தலும், பண்பும், நண்பும், பழிபாவம் அஞ்சுதலும் முதலிய" பகுதிகளுடையது எனவும், மனத்திட்பம் என்பது "கடைப்பிடியும், நிறையும், கலங்காதுதுணிதலும் முதலிய" பகுதிகளுடையது எனவும் நச்சினார்க்கினியர் விரித்துரைத்தனர்.

தலைவியோ அச்சமும், நாணமும்,மடமும், பயிர்ப்பும், நிறையும் வாய்ந்திருத்தல் வேண்டும்.

"அச்சமுநாணுமடனுமுந்துறுத்த
நிச்சமும்பெண்பாற்குரியவென்ப"

என்பது தொல்காப்பியச்சூத்திரம்.

இத்தகைய இலக்கணம் வாய்க்கப்பெறாத தலைவனும், தலைவியும் கூடுங் களவொழுக்கத்தின்கண் இன்பம் சிறவாதென்பது வெளிப்படை.

இங்ஙனம் தலைவன் தலைவியர்க்கு இலக்கணம்வகுத்தவர், அவர்கள் இன்னவருணத்தாராயிருத்தல்வேண்டுமென்பது கூறிலர். ஆதலின் அது எல்லாவருணத்தார்க்கும் பொது எனக் கொள்ளல்வேண்டும். தொல்காப்பியம் 'களவியல்' முதற்சூத்திரவுரைக்கண்ணே "களவொழுக்கம் பொதுவாதலின் நான்குவருணத்தார்க்கும் ஆயர்

முதலியோர்க்கும் உரித்து" என அந்தணர்குலத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவராகிய நச்சினர்க்கினியர் கூறியிருப்பது கவனிக்கற்பாலது. இனி,

*"ஒத்தகிழவனுங்கிழத்தியுங்காண்ப
மிக்கோனாயினுங்கடிவரையின்றே"

என்பது இலக்கணமாதலால் உயர்ந்தவருணத்தோர் தாழ்ந்தவருணத்துப்பெண்ணைக் கந்தருவமணஞ் செய்துகொள்ளலாம் என்பதும், தாழ்ந்தவருணத்தோர் உயர்ந்தவருணத்துப்பெண்ணைக் கொள்ளுதல் பொருந்தாது என்பதும் போதரும்.

இத்தகைய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர்கண்டவுடனே காதல்கொண்டு உள்ளமுடைதல் சிறப்புடைத்து. இங்ஙனம் கண்ட அப்பொழுதே இராமபிரானும் சீதாபிராட்டியும் ஒருவர் மீது ஒருவர் ஆருக்காதல்கொண்டார் என்பதைக் கம்பநாட்டாழ்வார்,

"எண்ணருநலத்தினாளிணையள்நின்றுழிக்
கண்ணொடுகண்ணிணைகௌவியொன்றையொன்
றுண்ணவுநிலைபெறா துணர்வுமொன்றிட
வண்ணலுநோக்கினனவளுநோக்கினாள்."

"நோக்கியநோக்கெனு நுதிகொள்வேலிணை
யாக்கியமதுகையான் றோளினூழ்ந்தன
வீக்கியகனைகழல்வீரன்செங்கணுந்
தாக்கணங்கனையவடனத்திற்றைத்தவே."

"பருகியநோக்கெனும்பாசத்தாற்பிணித்
தொருவரையொருவர்தமுள்ளமீர்த்தலால்
வரிசிலையண்ணலும்வாட்கணங்கையு
மிருவருமாறிப்புக்கிதயமெய்தினார்."

என மிக அழகாகப் பாடியுள்ளார். திருவள்ளுவனாரும்,

---

* தொல்காப்பியம்: களவியல்.

"கண்களவுகொள்ளுஞ்சிறுநோக்கங்காமத்திற்
செம்பாகமன்றுபெரிது."

"கண்ணொடுகண்ணிணைநோக்கொக்கின்வாய்ச்சொற்கள்
என்னபயனுமில."

எனக் கூறினர். இன்னும், இவற்றுக்கியையவே,

"நாட்டமிரண்டுமறிவுடம்படுத்தற்குக்
கூட்டியுரைக்குங்குறிப்புரையாகும்"

எனத் தொல்காப்பியத்திலும்,

"அரிவைநாட்டமகத்துநிகழ்வேட்கை
தெரியவுணர்த்துங்குரிசிற்கென்ப"

என நம்பியகப்பொருளிலும் இலக்கணம் எழுந்ததும் இங்கு நோக்கற்பாலது.

அன்றியும், ஆங்கிலத்திற் பழையநாடகாசிரியராகிய கிரிஸ்டவர் மார்லோ (Christopher Marlowe) என்பவரால், தமது நாடகம் ஒன்றன்கண்ணே வரையப்பெற்ற, "who hath loved, that loved not at first sight" என்னும் வாக்கியம், உலகெலாம் புகழும் அலகிலாக்கீர்த்திவாய்ந்த ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்பவரால், அவரியற்றிய நாடகமொன்றில் மேற்கோளாகக் கொள்ளப்பட்டுச் சிறப்புற்றிருக்கிறது. அதனை இக்காலத்துத் தமிழ்ப்புலவர் ஒருவர் "கண்டவக்கணத்திலேகாதல்கொண்டிடா, எண்டகுகாதலர்யாவராபவோ ?" எனத் தமிழில் மொழிபெயர்த்துத் தாமெழுதியதொரு புத்தகத்திற் சேர்த்திருக்கிறார்.

இங்ஙனம்"காதலிருவர்கருத்தொருமித் தாதரவுபட்டு"ஒருவர்மீதொருவர் வேட்கைநோக்கு நோக்கியபோதே, உள்ளத்தாற் புணர்ச்சி நிகழ்ந்ததாயிற்று. ஆதலின் இவர்கண்மாட்டு மெய்யுறுபுணர்ச்சி நிகழினும், நிகழாமற்போயினும் முன்னிகழ்ந்த உள்ளப்புணர்ச்சியும் கந்தருவமாம் என்பது, நச்சினார்க்கினியர் "அச்சமு நாணும்" என்னுஞ் சூத்திரவுரைக்கண்ணே "இருவர் கண்ணுற்றுக் காதல்கூர்ந்த

வழியெல்லாம் கந்தருவமென்பது வேதமுடிபாதலின், இவ் வுள்ளப் புணர்ச்சியும் கந்தருவமாம் எனக் கூறியதனுற் போதரும்.

இப்படித் தெய்வசங்கற்பத்தால், தலைவியை எதிர்ப்பட்டுப் புணர்ந்த தலைவன், அவளைப்பிரிந்துபோகும்போதும், பின்னரும் அத் தலைவன்தலைவியரது மனநிலையையும் செய்கைகளையுந் தொல்காப் பியனுர் விரித்துரைக்கின்றுர். தலைமகன் பிரியும்போது தன் அன் பின்மிகுதியைத் தலைவிக்குக்காட்டுமாறு, "கருங்குழற்கற்றை மருங்குற இருத்தி, அளகமுநுதலுந் தகைபெறநீவி, ஆகமுந் தோளும் அணிபெறத்தைவந்து, குளிர்ப்பக்கூறித் தளிர்ப்பமுயங் கிப்பிரிவல்" என இறையனுரகப்பொருளில் மிக்கநயமுறக்கூறப் பெற்றுளது. இத்தன்மையனுய்ப்பிரிந்த தலைவன் பின்னர்ப் பாங்கன், தன்னிடத்து வேறுபாடுகண்டு யாதெனவினவத் தான் நடந்தது கூறலும், பின் தழை * யும், கண்ணியும் முதலிய கையுறைகொண்டு, தோழியிடத்துத் தனது குறையிரத்தலும், தொழி தலைவிமாட்டுக் குறைவேண்டலும், தோழி அதற்கிணங்கலும், பின்னர்ப் பகற்குறி, இரவுக்குறி இவற்றின்கண்ணே தலைவன் தலைவியர் கூடலும், தோழி வரைவுகடாவுதலும், தலைவன் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலும், அன்றி அலர்மொழிவெளிப்படத் தலைவியுடன் வெஞ் சுரத்துநெறியே எகுதலும், தோழிமுதலியோர் தக்ககாரணங் கொண்டு செவிலிமுதலியோர்க்கு முறையே அறத்தொடுநிற்றலும் பிறவுமாகிய எல்லாம் இயற்கைப்புணர்ச்சியின்பின்னர் நிகழும் செயல்களாம்.

தோழி எனப்படுபவள் செவிலித்தாயினது மகளாய்த் தலைவி யுடன் இளமைதொட்டே உடனுறைந்துவரும் பாங்கியாவாள். அவள் தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினைமறைத்தல் முதலிய இவற் ருற் கந்தருவமணஞ்செய்துவந்த தன் தலைவியிடத்து வேறுபா டுணருவள். இங்ஙனம், இதனை முன்னுறவுணர்ந்த தொழிமாட்டுத் தழையும் கண்ணியுங்கொண்டு தலைவன் வந்து தன்குறையிரப்ப,

* தழை என்பது இலை, பூ முதலியவற்றுல் தொடுத்துப் பண்டைக் காலத்து இளம்பெண்கள் அணியும் ஒரு உடைவிசேடம்.

அவள் முதற்கண் தலைவியினது இளமை, பேதைமை முதலிய கூறி, அக்குறையை மறுப்பள். தலைவன், தலைவி தனக்கு இன்றியமையாதமைகூறி, "குறைமுடிக்காவிடில் மடலேறுவேன், வரைபாய்வேன்" என்னலும், தோழி அவனை ஆற்றுவித்து அகற்றுவள். பின்னர், தோழி தலைவியிடம் சென்று தலைவனதுதன்மைகூறி, அவன் தந்த கையுறையைப் புகழ்வள். அதற்குத் தலைவி அறியாள் போன்றிருப்ப, தோழி தலைவனது துயர்நிலையை விரித்துக்கூறி, அக்குறையை ஏற்குமாறு செய்வள்.

இங்ஙனம் பாங்கியிற்கூட்டம்பெற்ற தலைமகன் பகலில், தான் தலைமகளைக்கண்டுகூடுமிடம் இது என்று குறியேற்படுத்திக்கொண்டு, அவளை அவ்விடத்தேகண்டு கூடி மகிழ்வன்; அன்றியும் இரவின்கண்ணுங் கூடவேண்டி அவன் இரவுக்குறியிரப்ப, முதலில் தோழி, ஆற்றினதுஅருமை, காவலினதுகடுமை முதலியனகூறி மறுப்பள்; பின்னர், தலைவன் அவற்றுக்குச் சமாதானங்கூறவே, அதற்குத் தலைவியும் தானும் இயைவள். அவ்விரவுக்குறி இல்லின்கண்ணேயே நிகழும்.

*"இரவுக்குறியேயில்லகத்துள்ளு
மனையோர்கிளவிகேட்கும்வழியதுவே
மனையகம்புகாக்காலையான"

†"இரவுக்குறியேயில்வரையிகவாது"

என்பன இலக்கணம்.

பற்குறிக்கு இவ் வரையறையில்லை.

(தொடரும்.)

வே. முத்துஸாமி ஐயன்.

---

* தொல்காப்பியம்.

† இறையனாரகப்பொருள்.

தமிழும் ஸம்ஸ்கிருதவுதவியும்.

Tamil and the influence of Sanskrit.

[உசுசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ் ஸம்ஸ்க்ருதத்தின் ஜன்யபாஷையல்ல.

தமிழ்ச்சொற்களின் அமைப்புக்களையும், இலக்கணங்களையும், பகுதி, விகுதி, சாரியை முதலான லக்ஷணங்களையுங் கவனித்தால், தமிழ் ஸம்ஸ்க்ருதபாஷையினின்று முற்றிலும் வேறானதென்று தெரியவரும். ஸம்ஸ்க்ருதஆர்யர்கள் தக்ஷிணதேசத்திற் குடியேற ஆரம்பிப்பதற்கு வெகுகாலத்துக்கு முன்னதாகவே, தமிழ்ப்பாஷை அல்லது அதன் பூர்வபாஷையாகிய த்ராவிடபாஷையொன்று தக்ஷிணத்தில் வழங்கிவந்ததாகத் தெரியவருகின்றது.

ஆர்யர்களின் வரவுக்கு முன்னால், தமிழ்ப்பாஷையானது வழக்குப்பாஷையாயிருந்தது தவிர இலக்கியம், இலக்கணமென்னும் பாகுபாட்டுடன், வாசகபாஷையாய் (literary) இருந்ததோ என்பதையும், அக்காலத்தில் ஏதாவது தமிழ்நூல்கள் வரையப்பட்டனவோ என்பதையும் நிர்ணயிக்கத் தக்க ஆதாரங்க ளகப்படவில்லை.

ஆதிநூல். தமிழ்நூல்களில் ஆதிநூலாய்க் கூறப்படுவது அகத்தியம் என்னும் இலக்கணநூல். இந்நூலின் ப்ரதி யிப்பொழுது கிடைப்பதரிது. இது பெரும்பாலும் ஸம்ஸ்கிருதவ்யாகரணநூலாகிய பாணினீயத்தையே யனுசரித்திருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

அகஸ்த்யர், உத்தரதேசத்தினின்றும் ஆதிகாலத்தில் இங்கு வந்த ப்ராஹ்மணரிஷியென்பதும், அவர்தான் ஆதித்தமிழாசிரியரென்பதும் யாவரும் அங்கீகரித்தவிஷயம். அவர் இங்கே வந்தகாலம் வரையறுத்துக்கூறுவது மிக்ககடினம். அவருக்குமுன் தமிழ்நூல்கள் யாதொன்று மிருந்ததாய்த் தெரியவில்லை.

அகஸ்த்யர் சிஷ்யர்கள் பதின்மர். அவர்களில் முக்கியமானவர் தொல்காப்பியர் என்ற ஓர் அந்தணர். அவரால் தொல்காப்பியம் என்ற ஓர் இலக்கணநூல், அகஸ்தியத்தை யனுசரித்தே எழுதப்பட்டதாய்த் தெரியவருகின்றது.

ஸம்ஸ்க்ருதபாஷையின் உதவியேயில்லாதிருந்தால், தமிழ்ப் பாஷை எந்நிலைமை யடைந்திருக்குமென்பதைப்பற்றி, இப்பொழுது விசாரிப்பது வீண்முயற்சியாகும்.

அகஸ்தியர்காலமுதல், தமிழ்ப்பாஷை அபிவிருத்திக்கு ஸம்ஸ்க்ருதம் விசேஷமாய் உதவிசெய்திருக்கிறதென்பது நன்றாய் வெளியாகின்றது.

ஸம்ஸ்க்ருதவுதவியை இருவகையாய்ப் பிரிக்கலாம். அவைகளாவன:—(1) சொற்கடன் (Borrowing of words.) (2) பொருட்கடன் (Borrowing of ideas.) என்பனவாம்.

சொற்கடன்.
Borrowing of words.

ஸம்ஸ்க்ருதச்சொற்கள் அநேகம் தமிழ்ப்பாஷையில் வழங்கிவருகின்றன. அவைகளாவன:—தத்ஸமம், தத்பவம், திரிபு என்பனவாம்.

தத்ஸமபதமென்பது சுத்த ஸம்ஸ்க்ருதச்சொல், யாதொரு மாறுபாடுமின்றித் தமிழில் வழங்குவதேயாம். உதாரணம்:— ஜலம், நதீ, பர்வதம், தேசம் முதலியன.

தத்பவம் என்பது, ஸம்ஸ்க்ருதச்சொற்கள் நேரெவராமல், பிராக்ருதச் சொற்களாயிருந்து தமிழில் அங்கீகரிக்கப்பட்டவைகள்.

தத்பவ - உதாரணங்கள்:—

ஸம்ஸ்க்ருதம்.	ப்ராக்ருதம்.	தமிழ்.
ஸ்த்ரீ	இத்தி	—த்தி, (வண்ணாத்தி)
காஷ்ட	கட்ட	கட்டை.
ராஜ்ஞீ	ராணீ	ராணி.
ஆஜ்ஞா	ஆண்ணா	ஆணை.

முக்தா	முத்தா (ஹிந்தி மோதி)	முத்து.
ஶுக்தி	ஸிப்பி	சிப்பி.
ஸூசி	ஸூயி	ஊசி.
பத்ர	பட்ட	பட்டை.
ஸ்தரா	....	தரை.
ஸ்திர	....	திறமை.
ஆர்ய	அஜ்ஜ (அய்ய. பாலி)	அய்யன்.
த்ராவிட	தமிட (தமிழ. பாலி)	தமிழ்
ப்ரவாள	பவாள	பவளம்.
வணிஜ	வாணிய	வாணியன்
ம்ருத்திகா	மட்டியா (ஹிந்தி. மட்டி)	மட்டி.
க்ருஷ்ண	கண்ண	கண்ணன்.
ஶ்ரேஷ்டி	செட்டி, சேட	செட்டி.

என்பனவாம்.

திரிபு என்பது இருவகைப்படும். அவையாவன:—

(1) வடமொழிச்சொற்கள், சில திரிபுவிதிகளின்படி மாறுபட்டுத் தமிழில் வழங்குபவை. உதாரணம்:— உலகம், அரசன், அட்டமி, முத்தி, பக்கம், புரிதல், இராமன், அரங்கம், இலக்கணம், இலக்கியம், பகுதி முதலியன.

(2) அவ்வாறு யாதொருவிதிக்கு முட்படாது உருக்குலைந்தவை. உதாரணம்:—அவிட்டம், திருவோணம், கேட்டை, ஆயில்யம், வைகாசி, மார்கழி, பங்குனி முதலியன. ஸ்ரீ என்பது திரு என மருவியதைக் காண்க.

குறிப்பு:—தற்காலத்தில் அச்சிடப்பட்டிருக்கும் தமிழகராதிகளில் ஒன்றையெடுத்துப்பார்த்தால், பாதிக்குக்குறையாது வடமொழிகள் அல்லது மேற்கூறியவாறு வடமொழிகளின் திரிவுகளாயிருக்கும்.

வடமொழிச் சொற்களைத் தமிழாக்குவதற்குச் சில முக்கியமான விதிகள்:—

(1) கூட்டெழுத்துக்கள்:—தமிழிற் கூட்டெழுத்துக்களில்லாத தால், வடமொழிக் கூட்டெழுத்துக்கள் பின்வருமாறு மாறும்.

(a) கூட்டெழுத்தில் இரண்டு ஒற்றுக்களும் தமிழிலுள்ள எழுத்துக்களானல், ஒரு ஒற்று அயல் எழுத்தாய் மாறும். பக்தி=பத்தி.

(b) இரண்டு எழுத்துக்களின் நடுவில் அ, அல்லது இ என்ற உயிர் சேர்க்கப்படும். நேத்ரம்=நேத்திரம்.

(c) ஒன்று தமிழ் அக்ஷரமாயும், மற்றொன்று தமிழிலில்லாத அக்ஷரமாயுமிருந்தால், வடமொழியெழுத்து அதையடுத்த தமிழ்மொழி யெழுத்தாகும். அஷ்டமி=அட்டமி. புஸ்தகம்=புத்தகம்.

2. (a) ஶ. ஸ. என்பது ச என்றாகும். சங்கரன், சூத்திரம்.

(b) ஷ என்பது ச என்றும், ட என்றும் மாறும். ஷஷ்டி=சட்டி. வேஷம்=வேடம்.

(c) ஹ என்பது மொழிமுதலில் அ என்றும், நடுவில் க என்றும் மாறும். ஹரிஹரன்=அரிகரன்.

(d) க வர்க்கம் முதல் ஐந்துவர்க்கங்களும் முறையே க,ச, ட, த, ப என மாறும். கட்கம், தினம், பாலன்.

3. ரகாமுதல் வடமொழிகள்முன் அ, இ, உ வரும். அரங்கம், இராமன், உரோமம்.

பொருட்கடன்.

Borrowing of ideas.

ஸம்ஸ்க்ருதபாஷையிற் சிறந்த அநேகபொருள்கள் தமிழிற் கலந்திருக்கின்றன. அவைகள் பதப்பொருள்கள், நூல்கள், வர்ணனைகள், அலங்காரங்கள், கதாம்சங்கள் எனப் பலவகைப்படும்.

பதப்பொருள்கள் என்பவை, ஸம்ஸ்கிருதபதத்தை அதேபொருள் படுமாறு தமிழிலேயே மொழிபெயர்ப்பது. ஷண்முகன் என்பது, ஆறுமுகன் எனவும், கும்பஜன் என்பது குடமுனியெனவும், ஸூத்ரம் என்பது நூல் எனவும் வரும்.

நூல்கள்:—வடமொழிநூல்கள் பல, தமிழில் மொழிபெயர்க்கப் பட்டும், அல்லது அவைகளையனுசரித்துத் தமிழ் முதல்நூல்கள் எழுதப்பட்டுமிருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை இராமாயணம், மகாபாரதம், பாகவதம் முதலானபுராணங்கள், வாகடம் முதலான வைத்யசாஸ்த்ரங்கள், பதினெண்சித்தர்கள்பாடல்கள், ஜ்யோதிஷ சாஸ்த்ரங்கள், அநேக வேதாந்தநூல்கள், சைவசித்தாந்தங்கள், வைஷ்ணவசித்தாந்தங்கள் முதலியன,முதல்நூல்களாயினும், ஸம்ஸ்கிருத புராணக்கதைகளையும் வர்ணனைகளையுமே அனுசரித்து எழுதப்பட்டுள்ளன.

வர்ணனைகள்:–விந்த்யம், ஹிமாசலம், ஸப்ததீவுகள், எழுகடல்கள், மேரு, உத்தரதேசங்கள் முதலான ஸ்தலவர்ணனைகளும், கற்பம், யுகம், மன்வந்தரம், ரிது முதலான காலவர்ணனைகளும் அநேகமாய் ஸம்ஸ்கிருதபாஷையினின்றும் அங்கீகரிக்கப்பட்டவைகளே. இந்திரன், வருணன், யமன், ஸ்வர்க்கம், பாதாளம் முதலான புராண வர்ணனைகளும் ஸம்ஸ்கிருதத்தினின்று வந்தவைகளே.

அலங்காரங்கள்:–உவமைமுதலான அணிகளெல்லாம், விசேஷமாய் ஸம்ஸ்கிருத அலங்காரங்கள் தமிழிற் காணப்படுகின்றன.

மேற்கூறியவைகளினின்றும், தமிழுக்கு ஸ்வயமாகப் பெருமையேயில்லையென்று தெரிவிக்கப்படவில்லை. ஆனால், தமிழின் அபிவிருத்திக்கு ஸம்ஸ்க்ருதம் எவ்வளவோ உதவியாயிருந்ததென்றுமாத்திரம் இதனால் தெரிவிக்கப்படுகின்றது. 'ஸம்ஸ்க்ருதத்தின் உதவியேயில்லாவிடினும் தமிழ் அபிவிருத்தயடைந்திருக்கமுடியாதா?' என்னும் விசாரணை யிப்பொழுதுசெய்யத் துணியவில்லை.

தமிழும் மற்ற த்ராவிடபாஷைகளும்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமென த்ராவிடபாஷைகள் நான்காகப்பகுக்கப்படும். இப்பாஷைகள் ஒரேதாய்ப்பாஷையிற்

பிறந்த ஜன்யபாஷைகளா யிருக்கின்றன. காலக்ரமத்தை விசாரிக்கையில், தமிழ்தவிர மற்றப்பாஷைகள் பிற்பட்டு உண்டாயினவென்றே தோன்றுகின்றன.

ஆதியில், தமிழ்த்தேசத்துக்கு எல்லைகூறுமிடத்து 'குணகடல் குமரி குடகம் வேங்கடம்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தற்காலத்திலும், தமிழ்ப்பாஷை வழங்குகின்ற எல்லை இவைகளே. இவ்வெல்லைக்கு வடகிழக்கே தெலுங்கும்; வடமேற்கே கன்னடமும், மேற்கே மலையாளமும் வழங்குகின்றன. ஆதியில், முற்கூறிய எல்லையில் த்ராவிடம், அல்லது தமிழின் தாய்ப்பாஷையானது வாசக பாஷையாயும், மற்ற இடங்களில், இப்பூர்வபாஷைகளின் பல சிதைவுகள் ஸ்தலபாஷைகளாயும் வழங்கிவந்திருக்க வேண்டும் என்றும், பிற்பட்டு, ஸம்ஸ்கிருத உதவிக்குத்தக்கவாறு இவ்வளவு மாறுபாடுகள் அடைந்திருக்கின்றனவென்றும் ஊகிக்கலாம்.

தமிழ்ப்பாஷையானது ஸம்ஸ்கிருதக்கலப்புக்குமுன்னதாகவே ஒரு தனி வாசகபாஷையாயிருந்தபடியால், ஸம்ஸ்க்ருதக்கலப்பு உருவத்தையேமாற்றுவண்ணம், மற்ற த்ராவிட பாஷைகளைக்காட்டிலும் தனிமையைக் காப்பாற்றிக்கொண்டுவந்தது.

தெலுங்குபாஷையானது, கி. பி. 4-வது நூற்றாண்டுக்குப் பிற்பட்டுத்தான் வேறாயிருப்பதாய்த் தெரிகின்றது. மகததேசத்தை யாண்ட மௌர்யவம்சதிலகனான அசோகனால் கலிங்கதேசமும், அதையாண்ட ஆந்திரர்களும் ஜயிக்கப்பட்டார்கள் என்றும், மௌர்ய ராஜவம்சம் பலஹீனமானவுடன், ஆந்த்ரர்கள் ஸ்வாதீனர்களாய், த்ரிலிங்கதேசத்தை யரசாண்டார்களென்றும், இதுதான் தெலுங்கு தேசமென்றும், இவர்கள்பாஷை ஆந்த்ரபாஷை அல்லது தெலுங்கு பாஷையென்றும் பாஷாவித்வான்கள் கூறுகின்றார்கள். கன்னடத்தின் சரித்திரமும் இதையனுசரித்தே யிருக்கின்றது.

மலையாளபாஷையானது கி. பி. 11-வது நூற்றாண்டுக்கு முன் தனிப்பாஷையல்லவென்றும், அதற்குமுன் எழுதப்பட்ட மலையாள சாஸனங்களிலுள்ள பாஷைக்கும், தமிழ்ப்பாஷைக்கும் வித்யாஸமே யில்லையென்றும் தெரியவருகின்றது.

மத்யகாலம்:

தமிழ்வாலாற்றின் மத்யகாலமானது,

(1) சங்கக்காலம் கி. பி. 200ம் ஆண்டுவரை.

(2) பௌத்தர்-க்ஷமணர்காலம் கி. பி. 800 வரை.

(3) சைவசித்தாந்தகாலம் கி. பி. 800 முதல் 1400 வரை.

(4) வைஷ்ணவசித்தாந்தகாலம் கி. பி. 1000 முதல் 1600 வரை. என நான்கு காலங்களாகப் பிரிக்கப்படலாம்.

இந் நான்குகாலங்களும் காலவரிசையாய்வருவதாய்க் கொள்ளலாகாது. ஒருகாலத்தின் இறுதியும் அடுத்தகாலத் துவக்கமும் ஸமகாலமாயிருக்கின்றன. ஏனென்றால் சங்கக்காலத்துப் புலவரிற் சிலர் பௌத்தர்களாயும் க்ஷமணர்களாயு மிருந்திருக்கின்றனர்.

அவ்வாறே சைவசித்தாந்தகாலமும் சுமார் 200 வருஷங்களுக்குமுன் துவங்கினும், பிற்பட்டு அதுவும் வைஷ்ணவசித்தாந்த காலமும் ஸமகாலமாயிருந்திருக்கின்றன.

மற்றப் பாஷாசரித்திரங்களைப்பற்றிக் கூறுமிடத்துப் பொதுவாய் அரசர்காலங்களையும், பெரிய வித்யாமுயற்சிகளையும் அனுசரித்துக் காலக்ரமங்கள் பரம்பரையாய் அணிவகுப்பது வழக்கம். ஆனால், இங்கு அவ்வாறுசெய்யாமல் மதக்ரமங்களையனுசரித்துத் தமிழ் நூல்களை வகுக்கத்துணிந்தேன்.

ஏனென்றால், மற்றச் சிறுதேசங்களிற்போலல்லாமல் அகண்ட இவ் விந்துதேசத்தில், கல்விஸ்தலங்கள் ஒரேகாலத்திற் பல இருந்திருக்கின்றன. ஓரிடத்திற் பௌத்தமதக்கல்வி அதிகரித்தால் மற்றோரிடத்திற் சைவமதமும், இன்னோரிடத்தில் வைஷ்ணவமதமும் விருத்தியடைந்திருக்கின்றன. தமிழ்நூல்களின் தன்மையையும் தத்துவங்களையும் அறிவதற்கு மேற்கூறியவிதமே எளிதானதாகும்.

---

1. சங்கக்காலம். (கி. பி. 200 வரை)

இக் காலமானது, ஸம்ஸ்கிருதம்வழங்கிய ஆர்யர்கள் தக்ஷிண தேசத்திற் குடியேறத்துவங்கியகாலமுதல் ஆரம்பம். அகஸ்தியரும்,

அவர் சிஷ்யர்களான தொல்காப்பியர் முதலானவர்களுமே தமிழ் ஆதிகவிகள் என்றும், அவர்கள் பாணினீயம் என்னும் வடமொழி யிலக்கணத்தை யனுசரித்தே தமிழிலக்கணம் எழுதியிருக்கின்றார்கள் என்றும், அவர்கள் ப்ராஹ்மணர்களென்றும் முன்னரே கூறப்பட்டிருக்கின்றது.

சங்கநூல்களிற் சில.

(1) மேற்கூறிய இலக்கணங்கள், அகஸ்தியம் தொல்காப்பியம் முதலானவை.

(2) பத்துப்பாட்டு:-கி. பி. 60—95. நக்கீரர் முதலானவர்கள் எழுதியவை.

(3) எட்டுத்தொகை.

(4) பதினெண்கீழ்க்கணக்கு:-நாலடியார், இனியவைநாற்பது, இன்னாநாற்பது, குறள், பழமொழி, ஆசாரக்கோவை முதலான நூல்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தவை.

பதினேண்கீழ்க்கணக்குவகுப்புநூல்களை யெழுதியவரிற் சிலர், ப்ராஹ்மணர், சிலர் ஜைனராகவுமிருக்கின்றார்கள். இக்காலந்தான் திருவள்ளுவர், ஔவை, இடைக்காடர் முதலானவர்கள் இருந்த காலம்.

---

2. பௌத்தர்-க்ஷமணர் காலம்.

ஐம்பெருங்காப்பியங்கள்.

(1) மணிமேகலை:-(கி. பி. 90) பௌத்த ஆசிரியனால், பௌத்த மதஸம்ப்ரதாயத்துக் கிணங்க எழுதப்பட்டுள்ளது.

(2) சிலப்பதிகாரம்:-(கி. பி. 74-133) மகததேசத்ததிபனான சாதகர்ணியைப்பற்றியும், கஜபாகுவைப்பற்றியும் இதிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

(3) ஜீவகசிந்தாமணி:-இது ஜைனமதத்தையனுசரித்த காவியம்.

(4) குண்டலகேசி.

(5) வளையாபதி:-பௌத்தமதத்தை யனுசரித்த காவியம்.

இதனல், அக்காலத்தில் க்ஷமணரும் பௌத்தரும் தமிழபி விருத்திக்கு எவ்வளவோ உதவிசெய்திருக்கின்றார்கள் என்பது நன்கு விளங்கும்.

ஐந்து சிறுகாவியங்கள்.

இவை தவிர 5 சிறுகாவியங்கள் என ஒருவகுப்புண்டு. அவைகளாவன:—

(1) நீலகேசி:—இது ஒரு ஜைனநூல். பௌத்தம், ஸாங்க்யம், வைசேஷிகம், யோகம், வேதாந்தம் இவைகளைக் கண்டித்து எழுதப்பட்டிருக்கின்றது.

(2) சூளாமணி:—மஹாபுராணக்கதையை யனுசரித்தது.

(3) உதயணன்கதை:— ஸம்ஸ்கிருத பிருஹத்கதையிலுள்ள வத்ஸராஜன்கதையை யனுசரித்தது.

(4) யசோதரகாவியம்.

(5) நாககுமாரகாவியம் என்பனவாம்.

இவைதவிர ஜைன ஆசிரியரான வாமனாசாரியரால் எழுதப்பட்ட மேருமந்தரபுராணமும், திவாகரம் முதலான நிகண்டுகளும் கவனிக்கத்தக்கவை.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸாமி ஐயர்.

தமிழ்நாட்டுக்குடிகள் பரதேசத்திற்படும் பாடுகள்.

நீருண்டு. நிலமுண்டு. வித்துண்டு. ஏருண்டு. இனமுண்டு. சனமுண்டு. கோயிலுண்டு. தீர்த்தமுண்டு. குருவுண்டு. அரசுண்டு. செங்கோலுண்டு. பஞ்சகாலத்திற் சென்றுபிழைக்க அயல்நாடுகள் எத்தனையோவுண்டு. இப்படி எல்லாவாய்ப்பு முடையதாகிய தமது பழைய தமிழ்நாட்டைக் காலந்தோறும்விடுத்துப் பரதேசஞ்செல்லுந் தமிழ்க்குடிகளுக்கும் சனங்களுக்கும் கணக்கில்லை. தாமாகப் பெரும்பொருளீட்டலாமென்றெண்ணிச் செல்வாரும், கூலித்தரவரது வஞ்ச ஆசைப்பேச்சில் வசப்பட்டு அறியா தடிமையாட்களாக மனம்பொருந்திச் செல்வாரும், இன்னவிடத்துக்குப் போகிறோமென்றறியாது வஞ்சித்துக் கொண்டுபோகப்படுவாருமாக இச் சனங்கள் மூன்று திறப்படுவார்கள். தாமாகமுயன்று பரதேசஞ்செல்லுகின்றவர்களுள்ளும், வஞ்சனையால் அடிமைப்படுத்தப்படுகிறவர்களொழிய, மற்றவர்கள் தங்கள் முயற்சியளவுக்குத்தக்கபடி பொருளீட்டித் தமது தேசத்துக்கு மீள்பவர்களும், சிலர் பரதேசத்திலேயே குடிகொண்டுவசிப்பவர்களு மாவார்கள். இரண்டாம் மூன்றுந்தரத்து ஏழைச்சனங்கள் சிங்கப்பூர் முதலிய மலாய்தேசங்களுக்கும், மோல்மேன், மோரிஸ், நேட்டால், பீஜி முதலிய தூரதேசங்களுக்கும் ஐந்துவருஷம் பத்து வருஷங்களுக்கு முறியெழுதிய அடிமையாட்களாகக் கொண்டுபோகப்படுகின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும், கூலித்தரவன்கையிலகப்பட்டநாள்முதலாக அக்கரைபோம்வரையிலு முண்டாகிய போசனச்செலவுகள், தரவன்செலவு, கப்பற்செலவு, வள்ளச்செலவு, வண்டிச்செலவு எல்லாமாக ரூ 160-முதல் ரூ 250-வரையும் கடனாளிகளாய்விடுகின்றார்கள். இவர்கள் அத்தேசத்திலே தினமொன்றுக்கு வேலைசெய்தாற் பெறுங் கூலி அரைரூபா முதல் முக்கால்ரூபாவுக்கு மேற்போவதில்லை. கரும்புந்தோட்டத்துவேலைக்கே பெரும்பாலும் ஆளாகின்றார்கள். பெண்களுக்குக் கூலி மிகக்குறைவு. இவர்கள் தனித்தனி செய்யவேண்டியவேலையோ சாதாரணமாக ஒருநாளில் ஒருவன் செய்துமுடிக்கக்கூடியதன்று. ஓராள் அவ்வேலை

யைப் பிரயாசத்தோடு செய்துமுடிக்கின் உடம்புநொந்து அடுத்தநாள் வேலைக்குதவாதவனுவான். அடுத்தநாள் வேலைக்குப்போகாவிடின் அடியும் உதையும் பெறுவதோடு அமைவின்மைக்குப் போலீஸ் கோர்ட்டில் தண்டனையும் பெறவேண்டிவரும். உள்ளவாறு நோயினுல் வருந்தினுலும் வேலைசெய்யப்போதல்வேண்டும். சோர்ந்து வீழ்ந்து குற்றுயிராய்க்கிடக்கும் அவசரத்திலேயே தோட்டத்து அதிகாரிகள் வைத்தியசாலைக்கு அனுப்புவார்கள். கருப்பந்தோட்டம் தேய்த்தோட்டமுதலிய தோட்டங்களிலேயுள்ள அதிகாரிகள் தமக்கு நோய்வந்தாலன்றிப் பிறருக்குவரும் நோயையும் வருத்தத்தையும் உணரும் ஆன்மாவில்லாதவர்கள். மிருகங்களுக்கும் கூலியாட்களுக்கும் என்னபேதமென்று வினவுகின்றவர்கள். ஆன்ம இரக்கமென்பது சிறிது மில்லாதவர்கள். மாலை ஆறுமணிவரையும் வேலைசெய்தவன் போய்ப் பசிதணிக்குமுன்னே அவனை அழைத்து மற்றொரு வேலைக்கு ஏவுவர். தனது நிலையைச்சொல்லி மறுக்கப்புகுவானுயின், சப்பாத்துதை தப்பாதுகிடைக்கும். இப்படியெல்லாம் வேலைசெய்தவிடத்தும் அவன் உண்டதும் உடுத்ததும்போக மிஞ்சுவதெல்லாம் அவன்மேற் கடனுகவேற்றியிருக்கும் ரூ 250-க்கு ஈடுபண்ணப்படும். ஈடுபண்ணியும் ஐந்தாம்வருஷத்திற் கணக்குமுடிக்கும்போது ஈடுபண்ணியதுபோகப் பாக்கிக்கடனு மிருக்கும். அதனையிறுப்பதெப்படி? மீண்டும் ஐந்துவருஷத்துக்கு அடிமைமுறி எழுதவேண்டிவரும். அந்த ஐந்துவருஷத்தினுள்ளே கடன்தீர்ந்து ஐம்பதுமுதல் நூறுரூபாவரையிலும் மிஞ்சினுலும் மிஞ்சும். அதற்குள் அக்காசைத் தோட்டத்துக்கு ஆதாயமாகவிடுத்து இறக்கினுமிறப்பன். தோட்டத்துக்கு ஆதாயமாக்குவதேயன்றி அப்பொருளை அவன் ஊரிலுள்ள தாயத்தாருக்கு அனுப்பும் பெருந்தகைமையைக் கேட்டறியோம். மிஞ்சிய ரூபாவைக்கொண்டு ஊருக்குமீண்டவிடத்தும் அதனைத் துறைமுகத்திலே கவர்ந்துகொள்ளும் பாதகர்களும் இருக்கிறுர்கள். அவர்களுக்குந்தப்பி வீடுசென்று இருப்பைநோக்கினுல், பத்துப்பதினைந்து மிஞ்சினுலும்மிஞ்சும். மிஞ்சாமல் உடுத்தசாரமும் போட்ட கம்பளக்கந்தையுமே மிச்சமானுலு மாகும்.

இதுவே தமது அருமைத் தாய்நாடாகிய தமிழ்நாட்டை விட்டுப் பரதேசஞ்சென்றுமீளுங் கூலியாட்களுட் பெரும்பாலா

ருடைய கதி. அவர்களை வஞ்சித்து அடிமைவலைக்குட் சிக்குவித்து வயிறுவளர்க்கும் கூலித்தரவர்களாகிய தேசத்துரோகிகள் ஜனத் துரோகிகள் சமயத்துரோகிகள் குடித்துரோகிகள் குலத்துரோகிகள் ஈசுரத்துரோகிகள் யமதூதர்கைப்பட்டகாலத்திற் படும் பாட்டை எவ்வாறு எண்ணுவோம் இப் பாதகர்கள் தாய்கதறியழப் பிள்ளை யைக்கொண்டுபோய் அடிமைச்சாலையில் அடைத்துவிடுவர். புருஷன் அழப் பெண்டாட்டியை வஞ்சித்துக்கொண்டுபோய் அடைத்துவிடு வர். ஏழைச்சனங்களுடைய முறையீடு யார்காதிலேறும்? ஏறச் சொல்வதெப்படி? ஏறினும் வினைக்கெட்டுப்போய் விசாரித்து நீதி செய்யும் அதிகாரிதான் யாவன்? தமிழ்நாட்டைவிட்டு இப்படி வஞ் சிக்கப்பட்டுப் போய்ப் பரதேசத்திலிருந்து வருந்தித் தாய்நாட்டை நோக்கி ஓலமிட்டு அழுது அழுங்கும் அகதிகளுடைய நிலையைப் பரோபகாரிகள் தேசோபகாரிகள் தமது சிந்தையிற்கொண்டு அவர் களை மீட்பதற்கு உபாயந்தேடுவதோடு இனிமேல், தமிழ்நாட்டுச் சனங்கள் இவ்வாறு அடிமைப்பட்டுப் பரதேசம்போகாவண்ணம் ஊர் கள்தோறும் பிரசங்கஞ்செய்தலானும், செய்வித்தலானுந் தடுத்தல் வேண்டும். கூலிச்சனங்களுக்கு உள்ளூரிலே போதியவேலையிருக்க வும் அவர்கள் பேராசையினாலே பரதேசத்திற்போய் வருந்துவதை அவர்களுக்கு நன்றாக விளக்கவேண்டும். இப்படிக் காலந்தோறும் தமிழ்நாட்டைவிட்டுச் சனங்கள் பரதேசஞ்செல்வதால் நெல்விளைவு சுருங்கிவிட்டது. பருத்திவிளைவு குறைந்துவிட்டது. மாடு ஆடுகள் சுருங்கிவிட்டன. கைத்தொழில்கள் குறைந்துவிட்டன. தானியவிலை ஏற்றமாய்விட்டது. வஸ்திரவிலை ஏறிவிட்டது. பால் தயிர் நெய்விலை கள் ஏறிவிட்டன. ஆளில்லாமையால், தினக்கூலி ஏறிவிட்டது. கைத் தொழில் சுருங்கினமையாற் கைத்தொழிற்பொருள்கள் விலையேறி விட்டன. இப்படிச் சனங்கள் தமது நாட்டைவிட்டுப் பரதேசத்திற் சென்று அங்குஞ் சுகமடையாது வருந்துவதோடு தமது தாய்நாட் டையும் பலவாறு கெடுக்கின்றார்கள். இவ் வுண்மைகளைத் தமிழ்வித்து வான்களும் ஏழைச்சனங்களுக்கு எடுத்து உபதேசித்துவருதல் வேண்டும்.

யாழ்ப்பாணம்,
நாவலர்கோட்டம். } ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

அறமும் அறவுரிமையும்.

(உளரு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

முற்குறித்த மூன்று அறநிலையங்களுக்கும் முறையே போதகர் அர்ச்சகர் ஆதீனகர்த்தர் இவர்களைத் தெரிந்தெடுப்பது ஜனசமூகத்தின் கடமையாம். அவர்களுடைய கல்வியறிவைமட்டும் கவனித்தாற் போதாது. அவர்களுடைய நல்லொழுக்கத்தையே முதலில் நாடவேண்டும். ஒருகாலத்தில் மாட்சிமையுற்ற விக்டோரியாமகாராணியார் அவர்கள் உவெல்லிங்டன்காலேஜில் பரிசுஅளிப்பதற்கு மாணாக்கரைத் தெரிந்தெடுக்கமாறு தம் பர்த்தாவுக்குச் சொன்னபொழுது மதியூகமாவது அதிகமான புத்தகப்படிப்பாவது உள்ள பையனைத் தெரிந்தெடுப்பதைவிட்டு மனப்பண்புடையானைத்தெரிந்து அவனுக்குப் பரிசு அளிக்கப்பட்டது. அவ்வாறு ஒழுக்கத்தையே நாடும் ஜாதியாரன்றோ அந்நியஜாதியாரை ஆளுந்திறமை வாய்க்கப்பெற்றுள்ளார்.

நம்முடயமுன்னோர் அன்புடன் அமைத்துவைத்திருக்கிற அறநூல்களின்கருத்தை உள்ளபடியாராயின் ஏனையஜாதியாரதுசாஸ்திரத்தின்கருத்திற்குத் தாழ்ந்ததன்று. ஆனால் நம்மவர் சிலவுண்மைகளை விளக்குவதற்கு ஏற்பட்டவேடங்களையே அவற்றை மறைப்பதற்கு ஏற்றசாதனமாக்கிக்கொண்டதுபற்றிப் பிறர் குறைகூறநேரிடுகின்றது. காலத்திற்குக்காலம் ஜனங்களுடைய நடையுடைபாவனைகள் மாறிவருகின்றன. காலத்திற்குத்தக்கவண்ணம் கருத்துப்பிறழாமல் வேடங்களை மாற்றவேண்டியது இன்றியமையாமையாம். துறவின் வேடம் பூண்டானொருவன், அவ்வேடத்திற்குரிய வுண்மையொழுக்கத்தைத் தழுவிநிற்க இயலாதபொழுது அவ்வேடத்தைமாற்றி விவாகம்புரிந்து நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தல் உத்தமமாகும்.

ஒருவன் குருஸ்தானத்திற்கு உரிமையாகவேண்டுமெனின் அவனுடைய ஒழுக்கத்தை முதலிற் கவனித்தல்வேண்டும். கல்வியறிவானது ஒழுக்கத்திற்கு உதவியேயன்றி ஒழுக்கத்தை உண்டாக்க மாட்டாது. சாதுசங்கப்பழக்கமே ஒழுக்கத்திற்கு முக்கியமானது. சாதுக்கள் என்பார் காஷாயவேடதாரிக ளல்லர் ஒருவனுடைய மனவொழுக்கம்சீரடைவதற்கு இல்லறமே சிறந்ததுணையாகும். இந்திரிய

நிக்கிரகத்திற்கு மனவொழுக்கமே மூலமன்றி மனைவி மக்களினது இன்மை காரணமாகாது. நம்முடையகையினால் நாம் களவும் செய்ய லாம். உழவும் செய்யலாம். செய்யத்தக்கது இதுவென்பது நம் முடைய அறிவின் ஆதீனத்திலிருக்கின்றது. "சென்றவிடத்தாற் செலவிடாதீதொரீஇ, நன்றின்பாலுய்ப்பது அறிவு" என்றமையால் உய்க்குந்திறன் நம்மிடம் வாய்ந்துள்ளது. ஆகவே, சாதுக்களாவார் யாவரெனினும் நல்லொழுக்கத்தைக் காக்கத்தக்க சாதனங்கள் அமை யப்பெற்று உள்ளூற நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கமுயலுவோ ரே ஆவர். இத்தகைமைவாய்ந்த நல்லோரது இணக்கத்தினால் ஒழுக்கம் உருப்படச் சிறந்தபெருமைக்குப் பாத்திரமானவரே உப தேசம்செய்யப் பாத்திரமாவர். அவரே நாம் வணங்கத்தக்க குரு ஸ்தானத்தின் உரிமையை உடையார். எத்தகைய உயர்வுற்ற பதவி யுள்ளவர்களிடத்தும் ஏதேனும் ஒருகுறையிருத்தல் இயல்பு. ஆகை யால் ஒவ்வொருவனும் பிரஜாபயம் ராஜபயம் ஈசுரபயமாகிய முப் பயங்களில் ஒன்றேனும் உடையனாயிருப்பின் அதனைநீக்கிக்கொள்ள முயற்சியுடையவனாவான். அம் முயற்சியில்லாதவன் இருமைப் பய னையும் இழந்தோனாவன். பாலப்பருவத்தில் நற்பழக்கமின்றித் துர்ப்பழக்கமிகுந்து நீக்கக்கூடாத நிலைமையையடைந்த முதியோர் தங்கள் பின்சந்ததியாராவது நன்னிலைமை பெறுவதற்குச் சாதகமா யிருத்தல்வேண்டும். தங்களுடைய தீயபழக்கங்களைத் தங்களுடைய சந்ததியார்க்குப் புலப்படுத்தாவாறு நடத்தல்வேண்டும். ஆதலால் பொதுஜனசபைகளில் ஒப்புக்கொண்ட துன்மார்க்கமுடையாருக்கு இடங்கொடுத்தல் கூடாது. அதிலும் நாம் பின்பற்றக் கடமைப்பட்ட வராயுள்ள போதகாசிரியர் அர்ச்சகர் மடாதிபதிகளாகிய இவர்க ளிடத்தில் பஹிரங்கமான குறைகள்காணப்பட்டால் உடனே அவர்களை நீக்கித் தக்கவர்களை நியமித்தல்வேண்டும். பெரியமனிதர் என்ற பெயர்வைத்துக்கொண்டு பிறருடைய வணக்கத்தைவிரும்புவோர் சிலர், தங்களுடைய துன்மார்க்கங்களை முற்றத்துறந்த முனிவர்க ளிடத்திலும் இருந்திருப்பனவாகக் கதைகளைக்கட்டிப் பின்சந்ததி யாருடையமதிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அவ்விதம் செய் தாற் பின்சந்ததியாரை முற்றுங்கெடுத்த பாதகர் ஆகிறார்கள். ஓர் ஆசானாயுள்ளான் தன்குற்றத்தை உணர்ந்து தன்னோடு அறுதியாகு

மாறு அந்த ஸ்தானத்தைவிட்டுநீங்கிப் பின்வரும் சீடர்களாவது புத்தியடையும்படி செய்வானாயின் அவனை யோக்கியனாக மதிக்கவேண்டும். தன்குற்றத்தை யுள்ளபடியே உணர்ந்தோன் எவ்விதமும் நல்லொழுக்கத்தையுடையவனாகத் திருந்துவான் என்பது திண்ணம். ஒருமனிதன் சோம்பலைநீக்கி நன்முயற்சியைக் கைக்கொள்வனேல் அவனும் நல்லொழுக்கமுடையவனாக மாறுவான் என்பது உண்மை. சோம்பலை வளர்ப்பானும் வளர்ப்பதற்கு உதவிபுரிவானும் பாதகனே யாவன்.

அறச்சாலைதாபித்துப் 'பாத்திரம் அறிந்து பிச்சைகொடு' என்ற முதுமொழிக்கு மாறாக,வேலைசெய்யாத சோம்பேறிகளுக்கு அன்னங் கொடுப்போன் யாசகத்துரோகம், வெகுஜனத்துரோகம், ஈசுவரத் துரோகம் இவையனைத்தும் ஒருங்கேபுரிந்தவன் ஆவன். ஜீவகாருண்யத்தைச் சிரேஷ்டமாகக்கொண்டு சோம்பலைநீக்கிக் குடும்பசகிதம் உண்டு உடுத்துச் சுகிக்குமாறு அகதிகளுக்கு வேண்டும் உதவிகள் புரிவோன் எவனோ அவனே சிறந்தபுண்ணியவானாவன். அவனே ஈசுவரன் ஜீவராசிகளுக்குத் தனுகரணபுவனபோகங்களை அருளிய திருவருள்நோக்கத்தை நிறைவேற்றினவன் ஆவன்.

தொகுத்துக்கூறின் அறம் என்பது மனிதனுக்கு இன்றியமையாத ஒழுக்கம் என்பதும், அவ்வொழுக்கத்திற் சிறந்தது ஜீவகாருண்யம் என்பதும், ஜீவகாருண்யத்தினாற் பெரியோர்கள் வித்யாலயம் தேவாலயம் மடலாயங்கள் ஸ்தாபித்தனர் என்பதும், வித்யாலயங்களை அரசாங்கத்தார் தம் மேற்பார்வையில் நடத்தவும், ஏனையதர்மங்களை அவ்வம்மதத்தினரால் நடத்தவும் சட்டம் அமைத்துள்ளார் என்பதும், ஒவ்வொருமதத்திலும் குறித்த அறங்கள் ஒழுங்காய் நடைபெறுமையாற் செவ்வனே நடைபெறுவதைக் காணவேண்டுமென்பதும், அங்ஙனம் நடத்துவதற்குக் குறித்த மூன்றுவகையான அறங்களுக்கும் நாயகமாயுள்ளவர் அவசியம் நல்லொழுக்கத்தினராயிருத்தல்வேண்டும் என்பதும், நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தற்கு இடையூறான ஆசார அனுஷ்டங்களை ஒழித்தற்கு நாம் உதவிபுரியவேண்டுமென்பதும், பின்பற்றும் மாணாக்கர் அடியார்கள் சீடர்கள் கெடுதலடையாவண்ணம் நீக்கமுடியாத துன்மார்க்கமுடைய குரவரைத் தூரவிலக்கல்

வேண்டுமென்பதும், அறச்சாலை தாபித்துச் சோம்பலை ஊக்கப் படுத்தாநின்ற அன்னசத்திரங்கள் அறமுடையனவல்ல வென்பதும், வேலையைக்கொடுத்து அகதிகளை இரக்ஷிப்பது மேன்மையான அறம் என்பதும், இத்தகைய சீர்திருத்தங்கள் நீதியுணர்ச்சியும் நல்லொழுக்கமும் பற்றிய மனவூக்கத்தினால் எளிதிற் கைகூடுமென்பதும், பகுத்தறிவுள்ளவர் அனைவரும் இதில் முயற்சித்தல் கடமையென்பதும் இவ் வுபந்யாசத்தின் கருத்தாம்.

இச் சீர்திருத்தங்களுக்கு அநுகுணமாக, எனது புல்லறிவிற் பட்ட ஒழுங்குகளைக்கூறி இவ் வுபந்யாசத்தை முடிப்பேனாகின்றனன்.

(1) கலாசாலையில், தற்காலம் ஏற்பட்டுள்ள மானேஜிங் கமிட்டியுடன் மாணாக்கரது ஒழுக்கத்தைமட்டும் கவனிக்கத்தக்க கமிட்டி ஒன்று ஏற்படுத்தல்வேண்டும். எழுதத்தெரிந்த ஒவ்வொரு மாணாக்கனும் தன்னுடைய தினசரிதத்தைக் காட்டத்தக்க 'டைரி'ப் புத்தகம் வைத்திருத்தல்வேண்டும்.

(2) தேவாலயத்தில் அர்ச்சகரது ஒழுக்கத்தைக் கவனிக்குமாறு ஆகமநூலுணர்ச்சியுடையாரது சங்கம் ஒன்று அவசியமானது. அச்சங்கத்தார் ஆலயங்களின் ஆகம அநுஷ்டானங்களைக் காரண காரியங்களுடன் விளங்கும்படி வினாவிடைப்புத்தகங்களில் வெளிப்படுத்தல்வேண்டும்.

(3) மடாதிபதிகள் ஆதீனச்சொத்துக்களை மடத்திற்குரிய சீடர்களிடம் ஒப்புக்கொடுத்துச் சாஸ்திரவளர்ச்சிக்குரிய சாதனங்களைமட்டும் தம் மேற்பார்வையில் வகித்தல்வேண்டும்.

(4) அறச்சாலைகளில் அகதிகளின் தேகவலிமைக்குத்தக்க பணிகளைக்கொடுத்து இரக்ஷிக்கவேண்டும். முழுதும் வேலைசெய்யத் திறமையற்றவர்களுக்கு இலவசமாக அன்னம் அளித்தல் வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து அறத்தை வளர்க்கும் விஷயத்தில் நம் சந்ததிகளும், இந்து மதமும், இந்துதேசமும் எவ்வித இடையூற்றினுக்கும் உள்ளாகாவாறு ஈசுவரன் அருள்புரிவார் என்பது திண்ணம்.

இலக்குமணப்போற்றி,

தச்சநல்லூர்.